# பாடசாலை சமூகத்தினருக்கான சாசனம்

## Collaborative. Respectful. Communication.

## ஒத்துழைப்பு. மதிப்பு. தொடர்பாடல்.

மாணவர்கள் கற்கும் சூழல்களானவை ஒத்துழைப்புத் தன்மை கொண்டதாகவும், ஆதரவுதவி அளிப்பவையாக-வும், ஒருங்கிணைந்தவையாகவும் இருப்பதை உறுதி செய்யும் பொருட்டு NSW அரச பாடசாலைகளைச் சேர்ந்த பாடசாலை ஊழியர்கள், கல்வியாளர்கள், பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் ஆகியோரது பொறுப்பு-க்கள் யாவை என்பதைப் பின்வரும் 'பாடசாலை சமூகத்தினருக்கான சாசனம்' கோடிட்டுக் காண்பிக்கிறது.

## எமது பாடசாலைகள் அளிக்கும் சேவைகள்

மாணவர்களது கல்விக்குக்கு ஆதரவுதவியாக இருக்கும் நேர்முகமான சூழல்களை மாணவர்களுக்கும், ஊழியர்களுக்கும், ஒட்டுமொத்த பாடசாலை சமூகத்தினருக்கும் ஏற்படுத்திக் கொடுக்கும் விதத்தில் NSW அரச பாடசாலைகள் செயல்படுகின்றன. ஒவ்வொரு மாணவரும் புரிந்துகொள்ளப்பட வேண்டும், மதிக்கப்பட வேண்டும் மற்றும் கவனிக்கப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்த நாங்கள் வெகுவாய் முயற்சிக்கிறோம்.

பெற்றோர்களும் பாடசாலைகளும் ஒத்துழைப்பாய்ச் செயல்படும்போது நல்லதொரு கல்விக்கான சூழல் ஏற்படுகிறது.

'NSW Department of Education 2018 - 2022 வினைத் திறன் திட்ட'த்துடன் இந்தப் பாடசாலை சமூகத்தினருக்கான சாசனம் இணைவாய் உள்ளது.



## நேர்முகமான சூழல்கள்

NSW பாடசாலைகளானவை நேர்முகமான சூழல்களைக் கொண்டனவாக இருக்கவேண்டும் என்பதும் மாணவர்களது முன்னேற்றமும் பாடசாலையினது அறிவிப்புச் செய்திகளும் பெற்றோர்களுக்கும் பராமரிப்பாளர்களுக்கும் தெரிவிக்கப்படவேண்டும் என்பதும் இன்றியமையாததாகும்.

பெற்றோர்களும் பராமரிப்பாளர்களும் பின்வருவனவற்றை எதிர்பார்க்கலாம்:

- மாணவர்களது கல்வியை ஊக்குவிக்கும் விதத்தில் இணைவாய்ப் பணியாற்ற எமது பாடசாலைகளுக்கு வரவேற்கப்பட.
- பாடசாலை ஊழியர்களால் தரப்படும் செய்திகளானவை தக்க நேரத்திலானதாகவும், கண்ணியமானவையாகவும், தகவல்களை அளிப்பனவாகவும் இருக்கும்.
- பாடசாலை ஊழியர்களோடு கொள்ளும் தொழில்ரீதியான தொடர்பாடல்களானவை ஒளிவுமறைவற்ற தன்மை, நேர்மை மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றின் அடிப்படையில் அமையும்.
- நியாயமான முறையில் நடத்தப்பட. பன்முகத் தன்மையை நாங்கள் மதிப்பவர்களாதலால் சகிப்புத்தன்மை மற்றும் புரிதல் ஆகியன ஊக்குவிக்கப்படுகின்றன.

அனைவருக்கும் நாங்கள் மதிப்பு மரியாதை அளிக்கிறோம்.

அனைத்து மாணவர்கள் மற்றும் ஊழியர்களது பொது நலனுக்கு நாங்கள் முந்துரிமையளிக்கிறோம்.

**பாதுகாப்பற்ற விதத்திலான நடத்தை** எமது பாடசாலைகளில் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல.

பாடசாலைகளுடன் நாங்கள் இணைவாய்ப் பணியாற்றுகிறோம்

**NSW அரச பாடசாலைகளது அனைத்து சமூகத்தினருக்கும் மதிப்பு மரியாதை மிக்க கல்விச் சூழல்கள் கிடைப்பதை உறுதிப்படுத்துதல்.**




ஒத்துழைப்பு மிக்க கல்விச் சூழல்களை உருவாக்குகிறோம்

இதில் நம் அனைவருக்கும் ஒரு பங்கு இருக்கிறது

மாணவர்களது கல்வியை முன்னெடுத்து வைக்கும் பொருட்டு நாம் இணைவாய்ப் பணியாற்றுகிறோம்

## எமது பாடசாலகளுடன் தொடர்புகொள்ளல்



தமது முழு கவனத்தையும் உங்கள் பக்கம் திருப்ப இயலும்போது எமது ஊழியர்கள் உங்களுடன் பேச நேரம் ஒதுக்குவார்கள். எமது ஊழியர்கள் வகுப்பறையில் இருக்கும்போது அல்லது மற்ற விடயங்களைக் கவனித்துக்கொண்டிருக்கும்போது, உங்களுடைய கேள்விகளுக்கு அவர்களால் உடனடியாகப் பதில் அளிக்க இயலாமல் போகக்கூடும் என்பதைத் தயை செய்து நினைவில் கொள்ளுங்கள்.

எழுத்து மூலமான தொடர்பாடல்கள் தக்கதாகவும், நியாயமானதாகவும் எளிதில் வாசிக்க இயலுமானதாகவும் இருக்கும் என்பதை எமது பாடசாலைகளும் சமூகத்தினரும் உறுதிப்படுத்துவர். உங்களது பாடசாலையுடன் தொடர்புகொள்ளவும், உங்களது பாடசாலை சமூகத்தில் வரவிருக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றி நடப்புநாள் வரை தெரிந்து வைத்திருக்கவும் மின்னஞ்சல் மற்றும் சமூக ஊடகங்களைத் தக்க விதத்தில் பாவிக்குமாறு உங்களை ஊக்குவிக்கிறோம்.



பெற்றோர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் மாணவர்களுக்கான எமது வழிகாட்டியானது  முறைப்பாடு செய்யும் முறையைப் பற்றிய பயனுள்ள தகவல்களைக் கொண்டுள்ளன: https://education.nsw.gov.au/about-us/rights-and-accountability/complaints-compliments-and-suggestions/guide-for-parents-carers-and-students

## மதிப்பளிக்கும் விதத்தில் செய்திகளைப் பெறுவதற்கான உரிமை உங்களுக்குள்ளது

மதிப்பளிக்கும் விதத்தில் நடத்தப்படுகிறோம் என்ற எண்ணம் ஏற்படுவதற்கான உரிமை அனைத்து வேலைத்தளங்களிலும் பணியாற்றுவோருக்கு உள்ளது. ஏற்றுக்கொள்ளத்தகாத மற்றும் மனதைப் புண்படுத்தும் விதத்திலான நடத்தைக்கு எமது பாடசாலை சமூகங்களில் இடமில்லை.



எமது பாடசாலைகளிலுள்ள மாணவர்கள், ஊழியர்கள் மற்றும் சமூகத்தினரது பொது நலத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டு ஏற்றுக்கொள்ளத்தகாத நடத்தைகளைக் கையாளுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பாடசாலை சமூகத்தோடான தொடர்பை வரையறைப்படுத்துவது இதில் உள்ளடங்கலாம், அல்லது அதி பாரதூரத் தருணங்களில் NSW காவல்துறைக்கு முறைப்பாடு செய்யப்படலாம்.

## ஏற்றுக் கொள்ளத்தகாத நடத்தைகளில் பின்வருவன, ஆனால் இவை மட்டுமல்ல, உள்ளடங்கலாம்:

- வன்முறை அல்லது அச்சுறுத்தும் சைகைகள் அல்லது சரீர அருகாமை போன்ற முரட்டுத்தனமான அல்லது மிரட்டும் செய்கைகள்.
- ஆபாச வசைகள், பால்ரீதி, இனரீதி மற்றும் கீழ்த்தரமான மறுமொழிகள் அல்லது மரியாதைக் குறைவான தொனி ஆகியவற்றை உள்ளடக்கிய முரட்டுத்தனமான அல்லது மிரட்டும் வகையிலான வார்த்தைகள்.
- பாடசாலை சமூகத்தினரது சமயம் அல்லது உடலியலாமை ஆகியவற்றின் காரணமாக அவர்களை வேறு விதமாய் நடத்துதல்.
- தகாத அல்லது கால விரயத்தை ஏற்படுத்தும் விதத்திலான தொடர்பாடல்.

ஒத்துழைப்பு.
மதிப்பு.
தொடர்பாடல்.